25-6-2018

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

OS. 63 /2016

Deposition of Dw/PW -5 Witness of Plaintiff Petition/Defendant/ Respondent Solemnly affirmed by Tr/Tmt.Sumathi, Assistant of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 25th day of June – 2018.

| | |
|---|---|
| Name திரு. செல்வம் | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

வா.சா.5 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை செய்யப்படுகிறார்.

மு.வி.

நான் தற்போது ஓமலூர் வட்டம் பெரியேரிபட்டி கிராமம் கிராம நிர்வாக அலுவலரகாக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். அழைப்பாணை தாசில் தார்பெயருக்கு அனுப்பப்பட்டிருப்பினும் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய கட்டுப்பாட்டில் இருப்பதால் நான் தாசில்தாரின் வாய்மொழியின் பேரில் சாட்சியமளிக்கிறேன்.

சர்வே நெ. 128/2 , 129/12, 129/14, 129/16, 129/20, 130/7 சம்மந்தப்பட்ட எப் எம் பி அ - பதிவேடு, சிட்டா,அடங்கல், ஆகிய ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். அவை முறையே எக்ஸ 1 முதல் எக்ஸ் வரை தாக்கல் செய்கிறேன். மேலும் சம்மனில் சொல்லப்பட்டுள்ள மேற்படி சர்வே எண்களை சம்மந்தப்பட்ட கந்தாய ரசீதுகள் சம்மந்தப்பட்ட பதிவேடுகள் ஓமலுர் தாலுக்கா அலுவலகத்தில் உள்ளதால் அதை தேடி எடுத்து வரவேண்டும்.

முதன்மை விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.

Sd/-
III Additional District Judge,
Salem.

25-06-2018
ஓ எஸ் 260/2015

வாசா.1 சுரேஷ்குமார் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.மற்றும் ஓ எஸ் 254/16 வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

கு.வி

நான் பெங்களூரில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோமொபைல்ஸ் தொழில் செய்கிறேன். இந்த பாகப்பிரிவினைக்காக வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். நான் ரமேஷ். பாக்கியம். யுவராஜ், கார்த்திகேயன் பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். என் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன். எதிர்வழக்குரையில் 2 முதட்ல 4 பிரிதிவாதிகளின் பெயரை தவறாக சொல்லியிருப்பதாக சொல்லப்பட்டிருப்பதாகவும் அது திருத்தம் செய்யப்படதா என்றால் செய்யவில்லை. வா.சா.ஆ 3 ல் ரமேஷ் என்வரின் பெயர் சொல்லப்படவில்லை ரமேஷ்குமார் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓ எஸ் 254/16 என்ற வழக்கை ரமேஷ்குமார் பாகம் கோரி ஒரு வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னுடைய பிராதில் நான் சேலம் முகவரியில் கொடுத்திருப்பதே பொய்யானது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்யும்போதுசேலம் முகவரியில்தான் குடியிருந்தேன். அதன்பிறகு வேலை நிமித்தமாக பெங்களூர் சென்று விட்டேன். வா.சா.ஆ 1 முதட்ல 3 ஆவணங்களில் தாவா சொத்து குறித்த வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் இல்லையென்று சொன்னால் சரிதான். என்னிடம் ஜெராக்ஸ் ஆவணங்கள்தான் உள்ளது வா.சா.,ஆ 1 முதல் 3 ஆவணங்கள்தான் கிடைக்கபெற்றது. தாவா சொத்து விவரம் தவறு என்றும் சொத்து விவரத்தை உறுதிப்படுததும் வகையில் எவ்விதமான வருவாய் துறை ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவிலலை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அடையாளம் காட்டும் வகையில் எந்தவித வருவாய் துறை ஆவணங்களை காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து விவரத்தில் பழைய சர்வே எண் புதிய சர்வே எண் சொல்லியிருக்கிறீரா என்றால் நான் சொல்லியிருக்கிறேன். பழைய சர்வே எண் புதிய சர்வே எண் எனக்கு தற்போது தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஒரு ஏக்கர். தாவா சொத்தின் பாகப்பிரிவினை ஆவணம் தவிர மூலப்பத்திரங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் இருந்த ஆவணங்களைத்தான் தாக்கல் செய்கிறேன். என் அப்பா பெயர் ஆர். வேணுகோபால். என் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள். என் அம்மா பெயர் சரோஜா முதல் மனைவி. என் அம்மா இறந்து விட்டார். பாக்கியம் என் அப்பாவின் இரண்டாவது மனைவி. என் அப்பாவிற்கும் பாக்கியத்திற்கும் இடையே பிறந்த குழந்தைகள் 2 முதல் 4 பிரதிவாதிகள். என்னுடைய பிராதில்தாவா சொத்துக்கள் அல்லாத வேறு சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பாத்டிதயப்பட்டது என்று சொல்லியிருக்கிறீரா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டவேறுசொத்துக்கள்இருது என்றும் அதை நான் இவ்வழக்கில்சேர்க்கவில்லையென்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ஓ எ்ஸ்254/2016 வழக்கில் நான் வழக்கறிஞரை வைத்து எதிர் வழக்குரைதாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் விவரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. ரமேஷ்குமார் தாக்கல செய்த வழக்கில்

குடும்பத்தின் மொத்த சொர்துதுக்கள் குறித்து சொல்லப்படும நான் இவ்வழக்கில்அதன்பேரில் திருத்தம்செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மற்ற சொத்துக்களை பிரதிவாதிகள் பங்கை ஏமாற்றும் எண்ணத்தில் இந்த வழக்கில் சேர்க்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொர்த்து விவரத்தில் சர்வே எண் 7/9 மற்றும் 7/10 மட்டும்தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 10 சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் இருக்கும் விவரம் எனக்கு அசல் 254/2016 வழக்கிலிருந்தே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. ஓ எஸ் 254/16 சொர்லலப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் திருபபி கொடுக்கும்படி நான் கேட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு ஏக்கரில்என்னுடைய பங்கைபொறுத்துதான்பங்கு கேட்டிருக்கிறேன். என் தந்தை வழி தாத்தா பெயர் பெருமாள் கவுண்டர். 30-9-1893 தேதிய கிரைய பத்திரத்தின் படி தாவா சொர்துது பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தகவுண்டர் யார் என்று தெரியாது. பெருமாள் கவுண்டர் நிலத்தை விற்காமலும் ஆவணங்களை எழுதி வைக்காமலும் இறந்து விடடார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர் என்பவர் பெருமாள் கவுண்டரின் தகப்பனார். ராமசாமிக் கவுண்டருக்கு பட்டா எண் 60 ல் 3 ஏக்கர் 66 செனட் நிலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதில் ஒரு ஏக்கர் விற்கப்பட்டது என்றும் மீதி சொத்தை பொறுத்து இந்த வழக்கில் நான் பாகப்பிரிவினை கோரவில்லை என்றுசொன்னால் சரியல்ல. ராமசாமி கவுண்டருக்கு பெருமாள் கவுண்டர் மட்டுமே ஆண் வாரிசு. 3 பெண் மக்கள். என்னுடைய வழக்கு விவரம்சொத்து விவரம் செலுத்தியிருக்கும் நீதிமன்ற கட்டணம் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பெயர்கள் தவறுதலாக சொல்லப்பட்டுள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஓ எஸ் 254/16 வழக்கின் 5 ,12 முதல் 14 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

கு.வி.

எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் அனைத்தையும்சேர்த்துதான் இவ்வழகது தாக்கல்செய்திருக்கிறேன். வேறுசொத்துக்கள் எதுவும் இல்லை. ரமேஷ்குமார் சொல்வதுபோல் சில சொத்துக்கள் விடுபட்டு விட்டது என்று சொல்வது தவறு. தாவா சொத்து தனியாகவும் 11 முதல் 14 பிரதிவாதிகள் சொத்து தனியாக உள்ளது- இரு சொத்துக்களுக்குமிடையே வண்டிப்பாதை உள்ளது. 11 முதல் 14 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை.

Sd/-
III Additional District Judge,
Salem.

25-6-2018

ஓ எஸ் 108/2013

வா.சா1 லதா

வா.சா., 1 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

கு.வி.

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். நான் வருமானவரி கணக்கு 2005 வருடத்திலிருந்து தாக்கல் செய்து வருகிறேன். தாவா சொத்து நாகமணி மற்றும் ஈஸ்வரி க்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால்எந்த ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்று னக்கு தெரியாது ஆனால் ஈஸ்வரிஅம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும். மேற்படி தாவா சொத்து ஈஸ்வரி அம்மாள் 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வாறு பர்தியப்பட்டது என்றால் உரிமை மூல ஆவணத்தை நான் பார்க்கவில்லை என் கணவர்தான் பார்த்தார். அசல் ஆவணத்தை என் கணவரிடம் கொடுத்தார்கள் என் கணவர் படித்து பார்த்துவிட்டு அவரிடமே கொடுத்து விட்டார் புகைப்பட நகல் வாங்கவில்லை. சொத்தை நான்தான் வாங்கினேன். என் கணவர்தான் சொத்தை கிரையம் பேசினார். சொத்து என் பேரில்தான் வாங்கப்பட்டது. சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தீரா என்றால் பர்ர்த்தோம். எந்த தேதியில் வில்லங்க சான்று போட்டு பார்த்தோம் என்றால் ஞாபகமில்லை. அந்த வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்தின் கிராமம், சர்வே எண். விஸ்தீரனம் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் கிராமம் தெரியாது சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் 87 சென்ட் ஆகும். கிரையம் வர்ங்குவதற்கு முன்பாக சொத்தை பார்வையிட்டேன். செக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியாது- ரூ 20 /- முத்திரைத்தாளில் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது. முத்திரைத்தாள் 23-4-2008 ல் நானும் என் கணவரும் என்னுடைய பெயரில் வாங்கினோம். கிரைய ஒப்பந்தத்திற்கு இரண்டு மாதத்திற்கு முன்பாக சொத்தை கிரையம் பேசினோம். ஈங்ஸவரி அம்மாளிடம் கிரையம் பேசினோம் . கிரைய ஒப்பந்த்ம் போடும்போதுதான் முத்திரைத்தாள்வாங்கி வந்தோம். முசிறியில் உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் கிரைய ஒப்பந்த தேதியில்தான் முத்திரைத்தாள் வாங்கினோம். 2-6-2008 ம் தேதியில் கிரைய ஒப்பந்தம் போட்டோம். ஈஸ்வரி அம்மாள் வீட்டில் வைத்து கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது. வா.சா.1 ஐ பத்திர எழுத்தர் செல்வகுமார் கையால் எழுதினார் .சாட்சி பின்னிடட்டு அசல் ஆவணங்களை பார்த்து முத்திரைத்தாளில் டைப் செய்து வந்தார் என்று கூறினார். பத்திர எபத்தர் செந்தில்குமார் டைப் செய்து அவராகவே கொண்டு வந்தார். செல்வகுமார் பத்திரத்தை டைப் செய்துயுகொண்டு வந்த போது ஈஸ்வரிஅம்மாள்வீட்டில் நான், என் கணவர், நாகமணி, ஈஸ்வரி. பூபதி, நாகமணியின் கணவர், சாட்சிகள் அம்பலவாணன்,

மாரிமுத்து ஆகியோர்கள் இருந்தோம்., அன்றைய தேதியில் ரூ 20 லட்சம் அன்வான்ஸாக ஈஸ்வரி அம்மாள் கையில் கொடுத்தேன். 500 ,1000 , 2000 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். ஒப்பந்த தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் கிரையம் செய்துகொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டது. மணி , யசோதா அந்த சொத்தில் குடியிருந்தார்கள். அவர்களை காலி செய்துகொடுக்க 6 மாத காலம் வாய்தா கொடுக்கப்பட்டது. 10-9-2008 தேதியில் ரூ 15 லட்சம் 500.1000,மற்றும் 2000 நோட்டு கட்டுகளாக ஈஸ்வரி வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது என் கணவர் சாட்சி அம்பலவாணன் ஆகியோர்கள் இருந்தோம். நாகமணி தன்னுடைய மகளின் திருமணத்திற்காகதொகை வேண்டும என்று கேட்டதால் 10-9-2008 ல் ரூ 15 லட்சம் கொடுத்தோம். அதை குறித்து ஒப்பந்த பத்திரத்தில் மேற்குறிப்பு செய்யப்பட்டது அது கையால் எழுதப்பட்டது. புளூ கலர் ,இங்க் பேனாவால் மேற்குறிப்பு எழுதப்பட்டது., என் கணவர் கையால்தான் எழுதினார். மகள் திருமணத்திற்காக தேவைப்படுவதாக வா.சா.ஆ 2 ல் வாசகங்கள் எதுவும் எழுதப்படவில்லை. வா.சா.ஆ 2 ல் ஸ்டாம்புமீது மாரிமுத்து கையெழுத்து போட்டார். வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. அதன்றிகு 25-10-2008 ல் ரூ 4 லட்சம் ஈஸ்வரிஅம்மாள் வீட்டில் வைத்து 500,1000,மற்றும் 2000 ரூபாய் கட்டுகளாக கொடுத்து என் கணவர் அதை கையால் ஒப்பந்த பத்திர்த்தில் மேற்குறிப்பு எழுதினார். அதிலும் ஸ்டாம்பின் மீது என் கணவர் கையெழுத்து போட்டார். ஈஸ்வரி அம்மாளின் மருத்துவ செலவிற்காக மேற்படி தொகை வாங்கியதாக சொன்னார்.மேற்படி காரணத்தை வா.சா.ஆ 3 மேற்குறிப்பில் எழுதவில்லை. 3.4 பிரதிவாதிகள் சொத்திலிருந்து காலி செய்து கிரையம் செய்து கொடுகும்படி வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் என் கணவர் தான் அனுப்பினார் தேதி ஞாபகத்தில் இல்லை. கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து 5 வருடம் கழித்துதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் நடவடிக்கை எடுக்காமல்இருந்ததற்கு காரணம் என்னவென்றால் காரணம் எதுவும் இல்லை. நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை., கிரைய ஒப்பந்த பத்திரத்திட்ல கிரையம் செய்துகொடுக்க தவறும்பட்சத்தில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மீதி கிரைய தொகையை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்து நீதிமன்றமே கிரையம் செய்து கொடுக்க வேண்டியது என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது மீதி கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை., இவ்வழக்கை 2013 ம் ஆண்டில் தாக்கல் செய்தேன். மாலைமலர் தினசரி நாளிதழில் பொது விளம் கொடுத்திருக்கிறேன். அது வழக்கு நிலுவையில் இருக்கும்போது கொடுக்கப்பட்டது அது 13-4-2013 என்றால் சரிதான். நான் 15-4-2013 ல் தான் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றம் அதற்குமுன்பே பொது அறிவிப்பு கொடுத்தாக தவறாக சொல்கிறேன் என்றால் சரிய்ல்ல. அதனால் தான் அந்த நாளிதழ் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.,வா.சா.ஆ 1 பத்திரத்தில் சொத்தை 1,2 நபர்கள் மணி , யசோதா ஆகியோர்களின் சுவாதீனத்திலிருந்து திருமப பெற்று 3ம் நபர் சுவீதுனத்தில் ் ஒபப்டைத்த தேதியிரிலருந்து 6 மாத வாய்தாவிற்குள் 3 ம் நபர் பாக்கி கிரைய தொகையை 1,2 நபர்களிடம் செலுத்த என்ற வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சுவாதீனம் ஒப்படைப்பு வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணத்தை பதிவு செய்திருக்கவேண்டும் என்றும் அவ்வாறு- பதிவு செய்யப்படாததால்அந்த ஆவணம் முழுமையான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 2,3 மேற்குறிபபுகளில் கண்ட தொகைக்கு முத்திரைத்தாள் கட்டணம்செலுத்ததாதால் அதுவும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.இவ்வழக்கில் ஒரு தலை பட்ச உத்தரவில் 3 மாத காலத்திற்குள் மீதி கிரைய தொகையை வைப்பீடு செய்யும்படி உத்தரவிடப்பட்டிருககிறது என்றுசொன்னால் சரிதான் .அதன் படி நான் செலுத்தவில்லை என்றம்காலதாமதமாக செலுத்தியிருக்கிறேன் என்று சொன்னால் அது தெரியாது. மீதி கிரைய தொகையை செலுத்த என்னிடம் போதுமான பொருளாதார வசதி உள்ளதாக நான் ஆவணம் எதுவும்தாக்கல் செய்யவில்லை. நான்பிரதிவாதிக்கு செலுத்தியிருக்கும் கிரைய தொகையை என்னுடைய வருமான வரி கணக்கில்

காட்டியிருக்கிறேன். அந்த வருமான வரி கணக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ல் உள்ள முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும மேற்குயிப்பில் உள்ள ஈ்ஸ்வரிஅம்மாள் நாகமணி கையெபத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கையெழுத்துக்கள் மாறுபாடு இருப்பதால் அது அவர்களுடைய கையெழுத்தல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதியோ அவரது தாயார் ஈஸ்வரிஅம்மாளோ கிரைய ஒப்பந்தம் போடவில்லயெட்னறம் அதற்காக முன் தொகை எதுவும் வாட்ஙகவில்லை என்றும் வா.சா. ஆ 1ஐ 1ம் பிரதிவாதியும் அவரது தாயாரும் எழுதி கொடுத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 2,3 ன் படி 1ம் பிரதிவாதியோ அவரது தாயாரோ தொகை எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதில் உள்ள கையெழுத்து அவர்களுடையதல்ல என் றசொன்னால் சரியல்ல. சொத்தை கிரையம் செய்துகொடுக்க மேற்படி ஈஸ்வரிஅம்மாள் ம்ற்றும் 1ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம்போட்டுகொடுக்கவில்லை என்றால் அதனால் அவர்கள் கிரையம் செய்துகொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் மணி,இ யசோதா யாரும் குடியிருக்கவிலலை எனறும், அவர்களை காலி செய்து கொடுக்கும்படியாக 1ம் பிரதிவாதியோ அவரது தாயாரோ என்னிடம் சொல்லவில்லை என்றும் நான் வழக்கிற்காக வா.சா.ஆ 1ல் காலத்தை நீட்டிப்பதற்காக அவ்வாறு வாசகங்கள் க்ண்டு எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணத்தை தயார் செய்து பிரதிவாதிகளை ஏமாற்றி சொத்தை அபகரிக்கவேண்டும் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் சொத்தை கிரையம் கோரும் எண்ணத்தில் இருந்திருந்தால் இடைப்பட்ட 5 வருட காலத்தில் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றும் வா.சா.ஆ 1 உண்மையல்ல என்பதால்தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமலும் அதன் பேரில் நடவடிக்கை எடுக்காமல்விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் செய்து கொள்ள தயார் நிலையில்இருப்பதாக சொல்வதற்கு ஆதரவாக எங்களுடைய வருமான வரி சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்ல செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான ஆவணத்தை தயார் செய்து சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடிசெய்யவேண்டும் என்றால் சரியல்ல. உண்மையில்சொத்தை கிரையம் பெறும் எண்ணத்தில் இருந்திருந்தால் அதற்குண்டான வில்லங்க சான்றிதழ் மற்றும்அசல் ஆவணங்களை வாங்கியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge,
Salem.

25-06-2018
ஓ எஸ் 99/2010
பி.வா.சா. 1 மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ..

இரண்டாம்மேல்முறையீடு எஸ்ஏ 505/1999 தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். பி.வா.சா.ஆ 11. அந்த மேல் முறையீட்டின் தீர்ப்பின்பேரில் இந்த தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் பழனித்து உடையாருக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பு ஏற்பட்டது அந்த செர்தது ஒப்பபடைக்கப்பட்டது என்று சொன்னால் சரியலல. எங்களுடைய பாகசொத்தை ஐ பி மனுவில் சேர்க்கப்படவில்லை.அதை Official Receiver இடம் ஒப்படைக்கவில்லை. பழனிமுத்து உடையாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஐ பி 36/1952 ல் மூலமாக 25-3-67 ல் டாக்குமெண்ட் நெ. 2081/67 டாக்குமெண்ட் மூலமாக 4034 சதுர அடி நிலத்தை Official Receiver வாதி பி. சி. நரசிம்மனுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமாக எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. வாதி தரப்பு தாக்கல செய்யப்பட்ட ஆவணங்களை பார்த்தேன்.

நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்க்பபடுகிறது-

Sd/-
III Additional District Judge,
Salem.